DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

STC-35/2023

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. கார்மேகம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed.)

19.05.2026 – 03.45 PM

முதல் விசாரணை:-

1. நான் சென்னையில் குடியிருந்து அங்குள்ள ஒரு டீக்கடையில் வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் மாரந்தை கிராமம் ஆகும். சுமார் 5 வருடங்களுக்கு முன்னதாக ஒரு நாள் மாலை 06.45 மணியளவில் நான் சென்னைக்கு கிளம்புவதற்காக புனவாசல் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டு முதுகுளத்துார் செல்லக்கூடிய ரோட்டை கிழக்கிலிருந்து மேற்காக கடக்க முயன்ற போது அந்த வழியாக வந்த ஒரு இருசக்கர வாகனம் வேகமாக வந்து என் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்று விட்டது. அந்த விபத்தில் நான் கீழே விழுந்து எனக்கு மூக்கிலும், இடது முழங்காலிலும் காயம்பட்டது.

2. அருகிலிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக என்னை கடலாடி அரசு மருத்துவனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு ஒரு நாள் மட்டும் கடலாடி அரசு மருத்துவனையில் உள்நோயாளியாக சிகிச்சை வழங்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் 5 நாட்கள் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை பெற்றேன். அன்றைய தினம் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் யார் என்பது எனக்கு தெரியாது. நான் அவரை பார்க்கவில்லை. அந்த வாகனத்தின் பதிவெண்ணையும் நான் கவனிக்கவில்லை. கடலாடி மருத்துவமனையில் இருந்த போது போலீசார்

என்னிடம் வந்து ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்று க்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. வழக்கின் எதிரி யார் என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

<u>பிறழ் சாட்சி:–</u>

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

கடந்த 08.12.2020ம் தேதி மாலை 06.45 மணியளவில் முதல் விசாரணையில் கூறிய சம்பவ இடத்தில் நான் ரோட்ைடை கடக்க முயன்ற போது வழக்கின் எதிரியானவர் TN 65 V 7021 Bajaj Discover இருசக்கர வாகனத்தில் அவரது தாயாரான வசந்தியை பின்புறம்அமர வைத்துக்கொண்டு வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஒட்டி வந்து என் மீது மோதியதில் எனக்கு விபத்து ஏற்பட்டது என்றாலும், அந்த விபத்தில் எதிரியின் தாயார் வசந்தியும் கீழே விழுந்து அவருக்கும் காயம் ஏற்பட்டதாகவும் புகார் வாக்குமுலத்திலும், போலீசார் விசாரித்தபோது கூறிவிட்டு எதிரி உறவினர் என்பதால் எதிரியுடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/G.தங்ககார்த்திகா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ)
கடலாடி